**<u>சாட்சியின் வாக்குமூலம்</u>**

**<u>திருவள்ளூர் மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிமன்றம்</u>**

**அசல் வழக்கு எண் : 113/2012**

DW1 – **திரு. யுவராஜன் த/பெ. சங்கர்**

**01.04.2026**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : | வட்டம் | : |
| தந்தை பெயர் | : | தொழில் | : |
| கிராமம் | : | வயது | : |

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ந்து செய்ய அனுமதிக்கப்படுகிறார் </u>:

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>** :

**நேரம் 15.40 மணி**

1 ஆம் பிரதிவாதி எந்த வருடம் பணிஓய்வு பெற்றார் என்றால் 1990 ஆம் வருடத்தில் பணிஓய்வு பெற்றார். பணிஓய்வு பலன்கள் அவருக்கு கிடைக்கப்பெற்றதா என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. ஓய்வு பெற்றபின்னர் 2007 ஆம் வருடம் எங்கள் வீட்டிற்கு வரும்வரை வாதியுடன் இருந்தார் என்றால் சரிதான். அதுவரை அவர்களுக்கிடையில் எந்த பிரச்சனையும் இல்லை என்றால் சரிதான். என் பிரமாண வாக்குமூலத்தில் உள்ள முகவரியில் எத்தனை வருடமாக குடியிருந்து வருகிறேன் என்றால் 2006 ல் வாங்கப்பட்டது. அப்போதிலிருந்து குடியிருந்து வருகிறேன். நான் பிறந்தது வளர்ந்து படித்தது எல்லாம் ஆற்காட்டில் தான் என்றால் சரியல்ல. என் தந்தை அரசு ஊழியர் என்பதால் 3 வருடங்களுக்கு ஒருமுறை பணிமாறுதலாகி செல்லுமிடங்களில் படித்து வந்தேன். நான் எந்த ஊரில் பிறந்தேன் என்றால் சென்னை, கே.சி. கார்டன் பெரவள்ளூரில் பிறந்தேன். பள்ளி கல்வி கிருஷ்ணகிரியில் படித்தேன். கல்லூரி மேல்மருத்தூரில் படித்தேன். நான் 1 ஆம் பிரதிவாதியான என் தாத்தாவுடன் எப்போதும் வசித்ததில்லை என்றால் சரிதான். விடுமுறையில் என் ஒருமாத காலம் என் தாத்தாவுடன் விடுமுறையில் அவர் வீட்டிற்கு செல்வேன். தற்போது என்னிடம் காட்டப்படும் கடிதத்தின் நகல் நான் திரு.வி.க. நகர் மின்சார அலுவலகத்திற்கு கொடுத்த 2023 ல் பெயர் மாற்றம் செய்வதற்காக கொடுக்கப்பட்ட கடிதத்தின் நகல் ஆகும். அது **வா.த.சா.ஆ.44** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

வாதி வீட்டிற்கு பெயர் மாற்றம் செய்வதற்காக பொய்யான தகவல் கொடுத்து பெயர் மாற்றம் செய்வதற்காக கடிதம் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. என் தாயார் திருமணமான பின்பு 1 ஆம் பிரதிவாதியும் வாதியும் சேர்ந்து தான் அன்றாட முடிவுகளை எடுப்பார்கள் என்றால் சரிதான். 1 ஆம் பிரதிவாதி காசிராஜன் வங்கி கணக்கு வைத்திருந்தது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அவரது வங்கி கணக்கில் ரூபாய் 2 லட்சம் இருந்ததையும் பாகப்பிரிவினை செய்யவேண்டும் என்றால் மேற்படி அவர் வங்கி கணக்கில் ரூபாய் 2 லட்சம் பணம் இருந்தது எனக்கு தெரியாது. அவரது வங்கி கணக்கில் பணம் மற்றும் நகைகள் இருந்தால் அதை பாகம் செய்துகொள்ள எனக்கு ஆட்சேபனை எதுமில்லை என்றால் அதை 2 ஆம் பிரதிவாதியும், வாதியும் சரிபாகமாக பிரித்துக்கொள்ள எனக்கு ஆட்சேபனை இல்லை. என் பாட்டி எவ்வளவு நகை வைத்திருந்தார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பாட்டி சொத்துக்களை விற்று வந்த பணத்தில் தான் என் தாத்தா என் அம்மா பெயரில் சொத்து வாங்கினார் என்றால் பாட்டியின் சொத்தில் என் அம்மாவிற்கு வந்த பங்கில் தாவா அட்டவணை சொத்து C & D வாங்கப்பட்டது. மொத்த சொத்துக்களும் பாட்டியின் சொத்தை விற்று வாங்கப்பட்டது என்றாலும் ஆகவே தான் என் தந்தை அரசாங்கத்திற்கு கணக்கு காட்டவில்லை என்றால் தவறு. மேற்படி சொத்துக்கள் இல்லாமல் 2 ஆம் பிரதிவாதி பெயரில் காஞ்சிபுரம் மாவட்டம், கிளாம்பாக்கத்தில் 75 சென்ட் நிலம் உள்ளது என்றால் சரியல்ல. ஆற்காடு, SSS பொறியியல் கல்லூரி அருகில் 2 ஆம் பிரதிவாதியின் பெயரில் 3 பிளாட்கள் உள்ளது என்றால் சரியல்ல. மேற்கூறிய சொத்துக்ளையும் பாகப்பிரிவினைக்கு உட்படுத்த வேண்டும் என்றால் அவ்வாறு சொத்துக்களே இல்லை. என் தாயாருடைய சொத்துக்கள் என் பாட்டி சொத்தில் வந்த பாகத்தில் வாங்கப்பட்டது என்பதற்கு 3 ஆம் நபர் சாட்சிகள் யாரும் உள்ளனரா என்றால் இல்லை. என் மாமா மூர்த்தி, என் தாத்தா காசிராஜனுக்கு மட்டும் தான் தெரியும். எனக்கு மேற்படி விவரங்கள் எதுவும் நேரடியாக தெரியாது என்றால் சரிதான். என் மனைவியின் பெயரிலும், அவர் குடும்பத்தார் மீதும் நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். என்னை அடித்துவிட்டார்கள் ஆகவே வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்திலும் நான் தரப்பினர் அல்ல என்றால் சரிதான். ஆகவே நான் தாக்கல் செய்த ஆவணங்கள் என்னால் குறியீடு செய்ய முடியாது என்றால் சரியல்ல.

என் பாட்டி சொத்துக்களை விற்று வந்த கூட்டுகுடும்ப பணத்தில் 1ஆம் பிரதிவாதி 2ஆம் பிரதிவாதி பெயரில் சொத்துக்கள் வாங்குவதற்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. அதேபோல் என் பாட்டியின் நகைகளையும் 2 பாகங்களாக பிரிக்க வேண்டும் என்றால் எங்கள் கையில் நகைகள் எதுமில்லை. என் பாட்டியின் சொத்தை விற்றதில் வாதிக்கு எந்த பாகமும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. அய்யப்பன் நகரின் ஒரு வீடு என் தாத்தா வாங்கி கொடுத்தார். விநாயகபுரத்தில் ஒரு இடம் வாங்கி கொடுத்தார். இரு குழந்தைகளையும் இன்ஜினியரிங் படிக்க வைத்தார். என் தாத்தாவிற்கு கே.சி. கார்டன் போர்ஷனில் வரும் மாதவாடகை ரூபாய் 48 ஆயிரத்தை வாதி வாங்கி அனுபவித்து வருகிறார். அது எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் அங்கு விசாரித்தபோது எனக்கு தெரியவந்தது. கே.சி. கார்டன் சொத்திற்கும் எங்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சென்னை சிட்டி சிவில் நீதிமன்றத்தில் தீர்பாகியுள்ளது என்றால் சரியல்ல. என் தாத்தாவை அடித்து விரட்டி விட்டோம் என்று குறுக்கு விசாரணையில் கூறியுள்ளேன் அவ்வாறு அடித்து விரட்டியதாக காவல் நிலையத்தில் புகார் கொடுக்க வில்லை என்றால் சரியல்ல. புகார் கொடுத்துள்ளோம். அந்த CSR நீதிமன்றத்தில் ஆவணமாக குறியீடு செய்யப்பட்டுள்ளது. நில அபகரிப்பு பிரிவில் கொடுக்கப்பட்ட புகாரின் பேரில் C.C. No. 5064/2023 விடுதலை செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். சிவில் நீதிமன்றத்தை அணுக கூறியுள்ளார்கள். மேற்படி C.C. No. 5064/2023 உத்தரவின் சான்றிட்ட நகல் **வா.த.சா.ஆ.45** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா சொத்துக்கள் அனைத்திலும் வாதிக்கு பாகம் உண்டு என்றால் சரியல்ல. சாட்சி தானாக முன்வந்து தன் தாத்தா டன்லப் கம்பெனியில் 02-08-1960 சேர்ந்ததாகவும் அக்டோபர் மாதம் 1988ல் ரூபாய் 3,638/- மாத சம்பளம் வாங்கியுள்ளார் அதற்கான சம்பள ரசீதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். அது **பி.வா.த.சா.ஆ.20** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆனால் வாதி ரூபாய் 244/- மாத சம்பளம் பெற்றுள்ளார். மேற்படி விவரம் நிரூபண வாக்குமூலத்தில், வாதுரையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

**நேரம் 16.10 மணி**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.